


தொலைக்காட்சி நிறுவனம் தயாரித்து பாலுமகேந்திரா இயக்கியிருக்கும் படம் — 'சந்தியா ராகம்'.

வயதான காலத்தில் நிராதரவாக நிற்க நேரிடுகிற ஒரு கிழவரின் கதை, எண்பது நிமிடங்கள் மட்டுமே ஓடும் இந்தப் படத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

''முதியவர்களின் பிரச்னை பற்றி எப்படிப் படமெடுக்கத் தோன்றியது?'' என்று பாலுமகேந்திராவிடம் கேட்டபோது சொன்னார்: ''நான் என்னுடைய மிடில் ஏஜில் இருக்கிறேன். வயது கூடுவதை - இந்த ஏஜிங் ப்ராசஸை - சுலபமாக ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. கிழவர்களானவர்களும் குழந்தைகளைப் போலத்தான் என்பதையும் யாரும் எளிதில் புரிந்து கொள்வதுமில்லை. அதனால்தான் இதைப்பற்றி படமெடுக்க நினைத்தேன்.''

''மரணம் என்பது உங்களைப் பயமுறுத்துகிற விஷயமாகப் படவில்லையா?"

"இல்லை. சாவு சட்டென்று முடிந்துவிடுகிற விஷயம் . அதில் சிக்கல் இல்லை . ஏஜிங் அப்படியில்லை " என்கிறார் பாலுமகேந்திரா.

'சந்தியா ராக'த்தில் வருகிற கிழவர் சொக்கலிங்கம் ஏதோ ஒரு மூலையில் இருக்கும் அமைதியான குக்கிராமத்தில் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறார். அப்பளம் இட்டு விற்றுக் குடும்பச் சுமையைத் தாங்குகிற கிழவியைத் தவிர வேறு துணையில்லாதவர். கிழவியின் மரணம் அவரை அநாதையாக்கிவிடுகிறது. பட்டணத்திலிருக்கிற தம்பி மகன் வாசுவைத் தேடி வந்து சேர்கிறார். வாசு. நகரத்தின் லட்சக்கணக்கான மிடில் கிளாஸ் மனிதர்களில் ஒருவன். வாசுவின் மனைவி சுதா ஒரு சராசரி குடும்பத் தலைவி . கிழவரின் வருகை — கர்ப்பிணியாக இருக்கிற அவளுக்குக் கிணற்றில் தண்ணீர் எடுக்கவும் , குழந்தையைப் பள்ளிக்கூடத்துக்கு கூட்டிப்போய் வரவும் உதவி கரமாகவே இருந்தாலும் , நிரந்தரச் சுமையாக அவர் இருந்துவிடுவாரோ என்று பயப்படுகிறாள். கிழவர் அன்பாக குழந்தைக்கு வாங்கித்தந்த வடையைச் சாப்பிட்டு குழந்தை நோய்வாய்ப்பட்டதும் சுதாவுக்கு எரிச்சல் வெடிக்கிறது.

சுயமரியாதையுள்ள கிழவர் - முதியவர்களுக்கான 'விஷ்ராந்தி' இல்லத்துக்குப் போய்விடுகிறார். சுதா பதறிப்போகிறாள். குடும்பத்தின் பொருளாதார நிலைமைதான்

அவளை எரிச்சலடைய செய்ததே தவிர, அவளுக்குக் கிழவர் மீது வெறுப்பேதும் இல்லை. முதியோர் இல்லத்துக்குப் போய் அவரைத் திரும்ப வருமாறு அழைக்கிறாள். கிழவர் மறுத்து விடுகிறார். பிறகு சுதாவுக்குப் பிரசவமான செய்தி கிடைக்கும்போது , அவளைப்பார்க்க மருத்துவமனைக்குக் கிழவர் வந்து சேர்வதுடன் படம் முடிகிறது.

'வீடு' படத்தில் தாத்தா - பேத்தியாக நடித்த சொக்கலிங்க பாகவதரும் அர்ச்சனாவும் இதில் மாமனார் - மருமகளாக நடித்திருக்கிறார்கள். வாசுவாக பாலு மகேந்திராவால் அறிமுகம் செய்யப்பட்டிருப்பவர் - நவீன ஓவியக் கலைஞரான வீர. சந்தானம்.

ஒரே ஒரு புல்லாங்குழலை மட்டுமே பயன்படுத்திச் செறிவான பின்னணி இசையை வழங்கியிருக்கிறார் எல். வைத்தியநாதன். (ஒரு தகவல்: இந்த வருடம் தேசிய விருதுகளுக்காகப் போட்டிக்கு அனுப்பப்பட்டுள்ள 21 படங்களில் 'சந்தியா ராகம்' உட்பட ஏழு படங்களுக்கு இசை - எல். வைத்தியநாதன்!)

'சந்தியா ராகம்' தியேட்டர்களில் வெளியிடப்படுமா?

அடூர் கோபாலகிருஷ்ணனின் 'மதிலுகள்' படத்தையும் தொலைக்காட்சிதான் தயாரித்தது. அடூரின் படம் தொலைக்காட்சியில் காட்டப்படுவதற்கு முன்பாக தியேட்டர்களில் ரி லீஸ் செய்யப்பட்டது போல இதையும் ரிலீஸ் செய்யும் வாய்ப்பிருக்கிறது. போகிற போக்கில் டெலிவிஷனும் ஒரு 'சக்சஸ்ஃபுல் புரொட்யூசர் — டிஸ்ட்ரிப்யூட்டர்' ஆகிவிடும் போலிருக்கிறது!

**11.03.1991**

ஆனந்த விகடன்